| | | |
|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **தேனி** | காலம் : | **03/07/2024** | முதல் | **07/07/2024** |
| அறிக்கை எண் : | **053/ 2024** | வெளியீட்டு நாள் : | **02/07/2024** | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (27.06.2024 முதல் 01.07.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 07-07-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/06 | 28/06 | 29/06 | 30/06 | 01/07 | தேதி | நாள்-1 03/07 | நாள்-2 04/07 | நாள்-3 05/07 | நாள்-4 06/07 | நாள்-5 07/07 |
| 12.5 | 2.9 | 1.2 | 0.9 | 3.1 | மழை (மி.மீ) | 2 | 1 | 0 | 2 | 2 |
| 35 | 33 | 39 | 40 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 31 | 32 | 33 | 33 | 32 |
| 27 | 25 | 27 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 21 | 21 | 21 | 20 |
| 7 | 3 | 3 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 7 | 8 | 8 |
| 83 | 65 | 68 | 63 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 56 | 44 | 44 | 65 | 50 | | 40 | 40 | 50 | 40 | 50 |
| 11 | 16 | 10 | 4 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 14 | 10 | 10 |
| வட மேற்கு | மேற்கு | மேற்கு | வட கிழக்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 3, 4, 6 மற்றும் 7 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 31°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 14 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (05 - 11 ஜூலை 2024):**

### மழைப்பொழிவு :

05-07-2024 - 11-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

### அதிகபட்ச வெப்பநிலை :

05-07-2024 - 11-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

05-07-2024 - 11-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நெல், வெங்காயம், கால்நடை.**

**நெல்:**
நெல் பயிரில் நுண்ணுயிர் உரங்கள் இடுதல் நல்ல பயனை அளிக்கும் நெல் நடவு நட்ட மூன்றிலிருந்து ஐந்து நாட்களுக்குள் ஒரு ஹெக்டேருக்கு 250 கிலோ என்ற அளவில் அசோலாவை பரவலாக தூவி நெற்பயிருடன் வளரவிட வேண்டும்.

அசோலா வளர்ச்சியடைந்த நிலையில், களை எடுக்கும் தருணத்தில் காலால் மண்ணிற்குள் மிதித்து விடுதல் வேண்டும்.

மேலும் 10 கிலோ நீலப்பச்சை பாசியின் விதையை நடவு செய்த 10-ம் நாளில் தூவி சீரான அளவு தண்ணீர் கட்டி வளர்த்திட வேண்டும்.

**வெங்காயம்:**
வெங்காய பயிரில் போட்ரிடிஸ் இலைக்கருகல் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் அறிகுறியானது இலைப் பரப்பில் நூற்றுக்கும் அதிகமான வெள்ளை நிறப்புள்ளிகள் காணப்படும்.

இந்த நோய் வேகமாகப் பரவி, செடியின் அனைத்து பகுதியையும் மடியச் செய்யும். மிதமான தாக்குதல் விளைச்சலைப் பாதிக்காது. ஆனால் அதிக தாக்குதல் ஏற்பட்டால் விளைச்சலை வெகுவாகக் குறைக்கும்.

இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 15கிராம் புரோப்பிநெப் 70 சதம் உடன் 10மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**
ஆடு வளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு. ஆடுகளின் எடை அதிகரிக்கவும், ஆட்டுகுட்டிகளின் இறப்பை தவிர்க்கவும் குடற்புழு நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகும்,

பொதுவாக ஜீலை முதல் செப்டம்பர் மாதங்களில் தட்டைப் புழுக்களுக்கான குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும்,

அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்கவும்.